காரணத்தால், அவர்கள் நூல் வாங்கமுடியாத நிலையில் நெசவுத் தொழிலைச் செய்யமுடியாத காரணத்தால், இன்று அவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று குறிப்பாக நம்முடைய தமிழகத்திலே அரசாங்கம் எடுத்துக் கொண்ட மில்கள் மூலமாகவும் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகவும் ஏறக் குறைய மாதம் 8,000 பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமக்கு கைத்தறிக்குத் தேவையான அளவோ 16 ஆயிரம் பேல்கள் ஆகும். எனவே கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் அரசு எடுத்துக்கொண்ட நூற்பாலைகளின் மூலமாகவும் உற்பத்தி செய்கின்ற நூலையாவது கைத்தறியாளர்களுக்கு நியாய மான விலைக்குக் கொடுத்திருந்தால்கூட இப்படிப்பட்ட கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படாமல் தடுத்திருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு ஆலை முதலாளிகள் கொடுக்கக்கூடிய நூலின் விலை ஒன்றிற்கு இரண்டு மடங்கு விலைவைத்துக் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, சர்க்கார் எடுத்துக் கொண்ட மில்களிலிருந்தும், கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் கொடுக்கப் படுகின்ற நூல்கூட அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அரசாங்கம் எடுத்திருக்கின்ற மில்களிலேயும் கூட்டுறவுத் துறை யிலேயும் உற்பத்தியாகின்ற நூலை அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

தனியார் துறையிலிருந்தும் போதுமான அளவிற்கு நியாயமான விலைக்குப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம்கூட நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது என்று தெரியவில்லை. முன்பொரு தடவை கைத்தறியாளர்கள் எல்லாம் வாழ்வதற்கு வழியில்லை என்ற நிலையில் அவர்கள் பிச்சையெடுக்க வேண்டிய நிலைக்குப் போய்க்கொண்டிருந்தார்களே, அப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கும் தோன்றியிருக்கிறது. இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட இப்பொழுது மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் பசியாலே வாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற அவசரமான முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்திவைக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே. உணவுக்கு அடுத்த படியாக இருக்கின்ற நெசவுத் தொழிலுக்கு ஒரு பாதகமான நிலை ஏற்பட் டிருக்கிறது. குறிப்பாக சேலம் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் எல்லாம்

கிளர்ச்சிப் பாதையிலே சென்றுகொண்டிருக்கிறார்கள், என்ற துரதிருஷ்டமான நிலைமை எழுந்துள்ளது.

இந்தப் பிரச்னை எப்படி எழுந்தது என்ற முழு விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. பஞ்சு விலை குறைந்திருக்கிறது, ஆனால் நூல் விலை அதிகமாகி யிருக்கிறது என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை களுக்கு யார் பொறுப்பு என்று சொல்ல நான் முற்படவில்லை. நம்முடைய மாநில அரசாங்கம், மிகப் பெரிய பிரச்னையாக இது இருக்கின்ற காரணத்தி னாலே, உடனடியாக வழிவகை காணவேண்டுமென்று வலியுறுத்த விரும்பு கிறேன். போராட்டத்தை அடக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்ப தன்மூலமாக இந்தப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணமுடியாது.

நான் அங்கே சென்றிருந்தேன். பல நெசவாளர்கள் குடும்பங்களோடு தொடர்பு கொண்டேன். அங்கேயிருக்கின்ற நிலைமை என்னவென்றால், பலரும் சொஸைடிகளை வைத்துக்கொண்டு நூலை மொத்தமாக வாங்கிக்கொண்டிருக்கி றார்கள். உண்மையான நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லை. கார்டு மூலமாக நூல் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான் சரியாக இருக்கும். இப் பொழுது இருக்கிற பிரச்சினையெல்லாம் அடக்குமுறையைக் கைவிட்டு, அவசா மான முக்கியமான இந்த விஷயத்திலே யுத்தகாலத்திலே நடவடிக்கை எவ்வளவு வேகமாகவும் முதலாவதாகவும் எடுப்போமோ, அதைப்போன்று அங்கே பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கின்ற மக்களுடைய துயரைப் போக்கக்கூடிய முறையிலே பரிகாரம் காணுவதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இதைத்தவிர ஒரு சில தாங்களை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் ஏதோ நாம் நூல் வாங்கவில்லை என்று சொல்கிறார்கள் கூட்டுறவுத் துறையிலே சில ஆலைகள் இருக்கின்றன. நலிந்த ஆலைகளை அரசாங்கம் எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறது. இவற்றின்மூலம் உற்பத்தியாகின்ற நூலை கூட்டுறவிலே இல்லாதவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமல்லாமல், இது சம்பந்தமாகப் போடப்பட்டு இருக்கிற கேஸ்களை எல்லாம் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ ஒரு பஸ் எரிந்துவிட்டது என்பதற்காக சேலத்திலே ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே நிலைமை மிகவும் மோசமாக இருக் கிறது. பலரையும் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள், நான் நேரடியாகச் சென்று கண்கூடாகப் பார்த்தேன். அம்மாதிரியான நிலைமைக்கு விடக்கூடாது. இதை ஒரு சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதாமல், இதற்கு உடனடித் தீர்வு காணவேண்டும்.

1973 மார்ச் 3] *[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]*

திரு. சட்டோபாத்தியாயா என்ற மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தைக் கூறியிருக்கிறார்கள். தங்களின் அனுமதியோடு அதை நான் இங்கே படித்துக் காட்டவிரும்புகிறேன். தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நூலை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை, அதனால்தான் நெசவாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறியிருப்பதாக தினமணிப் பத்திகையிலே வந்திருக்கிறது. இம்மாதிரியான நிலைமைகளையெல்லாம் மத்திய அமைச்சர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது? இதற்கு மாநில-மத்திய அரசு போராட்டத் தைக் காட்டி மிகைப்படுத்தாமல் மக்களுடைய பிரச்சினையாகக் கருதி தீர்வு காணவேண்டுமென்று கூறி அதற்காக இந்த அவையை ஒற்றிவைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திலே சேலத்திலே நடைபெற்ற கைது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே உள்ள எல்லாக் கட்சித் தாப்பினரையும் அடிக்கடி அழைத்துப் பேசியிருக்கிறோம். நாட்டு நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறோம். மாநில அரசு மத்திய அரசாங்கத் தினிடத்திலே வலியுறுத்த என்ன என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதைக் கூறியிருக்கிறோம். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நெசவாளர்கள் பிரச்சினைப்பற்றி அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப்பேசி அவர்களுடைய ஒத்துழைப்போடுதான் எல்லோரும் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு அதன்மூலம் எங்கெங்கே தவறுகள் நடக்கிறதோ, அதற்குப் பரிகாரம் காணலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிரந்தரமான பரிகாரம் என்றால், ஒவ்வொரு தறியாளருக்கும் ஒரு அடையாள கார்டு கொடுத்து நூல் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை எல்லோரும் பாராட்டினார்கள். அதற்கும் அனைத்துக் கட்சி குழு வொன்று அமைக்கப்பட்டது.

சேலத்தைப் பொறுத்தவரையிலே இப்பொழுது நடைபெறுகிற போராட்டம் எந்த அடிப்படையிலே நடைபெறுகிறது என்பதை நான் விளக்க இப்பொழுது முற்படவில்லை. மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்திற்கு தனி அக்கறை எடுத்துக்கொண்டு பல கட்சிக்காரர்களையும் கூட்டிப் பேசி இருக்கி றோம். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த அளவில் அந்தப் போராட்டத் தலைவர்கள் எல்லாம் இந்த மாநில அரசுடைய நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற முறையிலே அந்தப் போராட்டத்தைத்